கூடுதல் மாவட்ட (விரைவு) நீதிமன்றம், கும்பகோணம்
முன்னிலை. திருமதி. T. ஜெயஸ்ரீ, M.L.,
கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி (விரைவு நீதிமன்றம்),
கும்பகோணம்
2026 – ஆம் ஆண்டு ஜுலை திங்கள் 10–ம் நாள் வெள்ளிக்கிழமை
(திருவள்ளுவராண்டு 2057 – பராபவ – வைகாசி திங்கள் – 26ம் நாள்)

**அசல் வழக்கு எண். 9/2022**
**(CNR No:TNTJ010003992022)**

-----

எம். சகுந்தலா ....வாதி

//எதிராக//

எம். கார்த்திகேயன், அவருக்காக அவரது
பொது அதிகாரம் பெற்ற முகவர், கே. சித்ரா. ....பிரதிவாதி

இவ்வழக்கானது என் முன்பாக கடந்த 06.07.2026 அன்று இறுதி விசாரணைக்கு வந்து, வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. கே.எஸ்.ராமகிருஷ்ணன் அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. எஸ். கென்னடி கண்ணன் அவர்கள் ஆஜராகியும், வழக்கு கோப்புகள் இருதரப்பு சாட்சியங்கள் சான்றாவணங்கள் மற்றும் இருதரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டு இதுநாள் வரையில் என் பரிசீலனையில் இருந்த இந்த வழக்கில் இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு பிறப்பித்த..

**தீர்ப்புரை**

வாதி இந்த வழக்கை, தாவா தொகை ரூ.49,39,966/–யை பிரதிவாதி இந்த வாதிக்கு அதன் அசல் தொகை ரூ.25,00,000/–க்கு பின்வட்டி 18% சேர்த்தும், வழக்கு செலவு தொகை சேர்த்து, செலுத்த வேண்டுமென உத்தரவிட்டு, முதல்நிலைத் தீர்ப்பாணை மற்றும் அதனை அனுசரித்து இறுதிநிலைத் தீர்ப்பாணை பிறப்பிக்கக் கேட்டு, தாக்கல் செய்துள்ளனர்.


JAYASHREE THOMAS
Digitally signed by JAYASHREE THOMAS
Date: 2026.07.27 13:18:17 +0530

2) **வழக்குரை சுருக்கம்**.

இந்த பிரதிவாதி தனது சொத்துக்களை பொறுத்து, அவரது மனைவி கே.சித்ரா என்பவரின் பெயருக்கு, சிங்கப்பூரில் வைத்து கடந்த 27.07.2016 அன்று ஒரு பொது அதிகார பத்திரம் எழுதி தந்து அது கடந்த 01.08.2016 அன்று குத்தாலம் சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. அந்த பொது அதிகார பத்திரத்தின் அடிப்படையில், மேற்படி சித்ரா, அவரது கணவரான பிரதிவாதிக்காக வேண்டி இந்த வாதியிடம், கடந்த 08.08.2016 அன்று ரூ.25,00,000/- கடன் பெற்றுக்கொண்டு அதற்காக தாவாச் சொத்தை பொறுப்பு ஏற்படுத்தி ஒரு பதிவான அடமான பத்திரம் எழுதி கொடுத்துள்ளார். மேற்படி கடனை 24% பின்வட்டி சேர்த்து ஐந்து ஆண்டு காலக்கெடுவில் திருப்பி செலுத்தி விடுவதாக ஒப்புக்கொண்டார். மேலும், தாவா அடமான சொத்தின் மூல ஆவணங்களையும் வாதி வசம் மேற்படி சித்ரா கொடுத்தார். அடமான காலக்கெடு முடிவடைந்த நிலையில், வாதி பலமுறை பிரதிவாதியை அணுகி, அடமான கடன் தொகையை திருப்பி செலுத்தும்படி கேட்டார். ஆனால், ஒவ்வொரு முறையும் ஏதாவது சாக்குபோக்கு சொல்லி காலம் கடத்தி வந்தார். எனவே, வாதி அவரது வழக்கறிஞர் மூலம் கடந்த 13.10.2021 அன்று பிரதிவாதிக்கு ஒரு அறிவிப்பு அனுப்பி அதனை பிரதிவாதி கடந்த 16.10.2021 அன்று பெற்றுக்கொண்டார். மேற்படி அறிவிப்பை பெற்ற பின்னரும், பிரதிவாதி தாவா அடமான கடன் தொகையை திருப்பி செலுத்த முன்வரவில்லை. எனவே வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். பிரதிவாதி, 24% பின்வட்டி சேர்த்து செலுத்த ஒப்புக்கொண்ட போதிலும், வாதி வழக்குரையில் 18% வட்டி மட்டுமே கோரியுள்ளார். எனவே தாவாப்படி தீர்ப்பாக வேண்டும்.

JAYASHREE THOMAS
Digitally signed by JAYASHREE THOMAS
Date: 2026.07.27 13:18:22 +0530

3) <u>பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையின் சுருக்கம்</u>.

1) இந்த பிரதிவாதி தாக்கல் செய்யும் எதிர்வழக்குரையில் குறிப்பாக ஒப்புக்கொள்ளும் சங்கதிகள் தவிர மற்றவற்றை வாதியே நிரூபிக்க கடமைபட்டவராவார்.

2) வாதி வழக்குரை பாரா–1ல் மேற்படி கார்த்திகேயன் சிங்கப்பூரில் வேலை பாரத்து வருவதால் அவரது மனைவி சித்ரா என்பவருக்கு கடந்த 27.07.2016 அன்று ஒரு பொது அதிகார ஆவணம் மூலம் சித்ராவை பொது அதிகார முகவராக நியமித்து அதனை கடந்த 01.08.2016 அன்று பொது அதிகார முகவராக குத்தாலம் சார்பதிவு அலுவலகத்தில் பதிவு செய்துள்ளதாக வாதி கூறியுள்ளதை வாதியே நிரூபிக்க கடமைபட்டவராவார்.

3) வாதி தாக்கல் செய்துள்ள வழக்குரையில் பாரா–2ல் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் பொய்யானவை மற்றும் உண்மைக்கு புறம்பானவை. அதனை வாதியே நிரூபிக்க கடமைபட்டவராவார். வாதி வழக்குரை பாரா–2ல், பிரதிவாதியான சித்ரா இந்த வாதியிடம் கடந்த 08.08.2016 அன்று ரூ.25,00,000/–(ரூபாய் இருபத்தைந்து லட்சம்) கடன் பெற்றதாகவும், அதற்காக 24% வட்டியை ஒவ்வொரு ஆண்டும் செலுத்துவதாகவும், மேற்படி கடன் தொகையை 5 வருட காலத்தில் திருப்பி கொடுக்கவேண்டும் என்று மேற்படி பிரதிவாதியான சித்ரா அவரது கணவர் பெயரில் உள்ள சொத்தின் அடமானத்தின் பேரில் பதிவு செய்து கொடுத்ததாக கூறுவது பொய்யான சங்கதியாகும்.

4) ஏனென்றால் பிரதிவாதியின் கணவர் கார்த்திகேயன் சிங்கப்பூரில் நல்ல ஊதியத்தில் பணிபுரிந்து வருகிறார். அதனை மறைத்து வாதி, பிரதிவாதிக்கு சொத்துக்கள் மற்றும் வருமானம் உள்ளதை துராக்கிரமாக அடையவேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில், வாதி, பிரதிவாதி சித்ராவை மூளைச்சலவை செய்து, வாதி நடத்தி வரும் வட்டி தொழிலை மேம்படுத்தும் விதமாக வாதி நடத்தி வரும் வட்டி தொழிலில் பிரதிவாதியையும் தொழில் கூட்டாளியாக சேர்த்து பெரிய அளவில் வருமானம் ஈட்டலாம் என்று ஆசை வார்த்தை கூறி, மேற்படி பிரதிவாதியின் கணவர் பெயரில் உள்ள சொத்தை, அதிகாரம் பெற்ற

முகவராக பிரதிவாதி இருப்பதால், வாதி, பிரதிவாதியிடம் அவரது கணவர் பெயரில் உள்ள சொத்தை வாதி பெயருக்கு அடமானமாக எழுதி கொடுத்தால் அதன் மூலம் வட்டி தொழிலுக்கு மூலதனத்தை பெற்று வட்டி தொழில் செய்யலாம் என்று கூறி பிரதிவாதியை ஏமாற்றி, பிரதிவாதி மூலம் குத்தாலம் சார்பதிவு அலுவலகத்தில் மேற்படி வாதி, எந்தவித பண பரிமாற்றமும் இல்லாத நிலையில், வாதி, பிரதிவாதியின் கணவருக்கு சொந்தமான சொத்திற்கு பொது அதிகார முகவராக அவரது மனைவி சித்ரா இருப்பதால், வாதி, பிரதிவாதியின் கணவருக்கு தெரியாமல் பிரதிவாதியை மூளைச்சலவை செய்து, பிரதிவாதியின் மீதுள்ள காழ்புணர்ச்சி காரணமாகவும், திட்டமிட்டு வாதி, பிரதிவாதியை ஏமாற்ற மேற்படி சொத்தை அடமானமாக எழுதி வாங்கியுள்ளார்.

5) வாதி பிராது பாரா–3ல் சொல்லியுள்ளதை வாதியே நிரூபிக்க கடமைபட்டவராவார். ஏனென்றால் பிரதிவாதி, வாதியிடம் எந்த ஒரு தொகையும் கடனாக பெறாத நிலையில், ரூ.25,00,000/– (ரூபாய் இருபத்தைந்து லட்சம்) த்தை சொத்தின் அடமானத்தின் பெயரில் 5 வருட காலத்திற்கு, ஆண்டொண்டிற்கு 24% வட்டி செலுத்துவதாக கூறியுள்ளது பொய்யான மற்றும் சட்டத்திற்கு புறம்பான சங்கதியாகும். அதனை வாதியே நிரூபிக்க கடமைபட்டவராவார்.

6) வாதி பிராது பாரா–3ல் சொல்லியுள்ளதை வாதியே நிரூபிக்க கடமைபட்டவராவார். பிரதிவாதி, வாதியிடம் எந்த ஒரு கடன் தொகையும் பெறாத நிலையில், மேற்படி வாதி, பிரதிவாதியிடம் வட்டித் தொழில் செய்ய உத்தரவாதமாக பிரதிவாதியின் கணவர் பெயரில் உள்ள சொத்தை துராக்கிரமாக அடையும் கெட்ட எண்ணத்தில் ஆசை வார்த்தை கூறி திட்டமிட்டு பிரதிவாதியை ஏமாற்றி மேற்படி சொத்தை அடமானம் பெற்றுவிட்டு ஐந்து வருட காலம் முடிந்துவிட்டதால், ரூ.25,00,000/– (ருபாய் இருபத்தைந்து லட்சம்)த்தை திருப்பி செலுத்தவில்லை என்று வாதி அவரது வழக்கறிஞர் மூலம் பொய்யான சங்கதிகளை கூறி, பிரதிவாதிக்கு வழக்கறிஞர் அறிவிப்பை அனுப்பியுள்ளார். அதனை பிரதிவாதி நேரடியாக பெற்றுக்கொள்ளவில்லை.

7) வாதி தாக்கல் செய்துள்ள வழக்குரையில் பாரா–5வில் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் பொய்யானவை மற்றும் உண்மைக்கு

புறம்பானவை. பிரதிவாதி, வாதி குறிப்பிட்டுள்ள கடன் தொகையை பெற்றுக்கொள்ளாத நிலையில், எந்த ஒரு எழுத்துபூர்வமான உடன்படிக்கையும் ஏற்படுத்தாத நிலையில், வாதிக்கும், பிரதிவாதிக்கும் ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளாதாக கூறுவது பொய்யான சங்கதியாகும். அதனால் பிரதிவாதி, வாதி குறிப்பிட்டுள்ள 24% மற்றும் 18% வீத வட்டியை செலுத்தவேண்டிய சட்டப்படி கடமைபட்டவர் அல்ல

8) வாதி குறிப்பிடுவதுபோல் எந்த ஒரு வழக்கு மூலமும் ஏற்படவில்லை. வாதி குறிப்பிடுவதுபோல் பிரதிவாதி எந்த கடன் ஒப்பந்த பத்திரமும் எழுதி கொடுக்கவில்லை. பிரதிவாதி எந்த ஒரு கையெழுத்தும் போடவில்லை. வாதி ஒரு பொய்யான மற்றும் கற்பனையான தேதியில் வழக்கு மூலம் ஏற்பட்டதாக போலியான மற்றும் போர்ஜரியான ஆவணங்களை ஏற்படுத்தி அதில் பிரதிவாதிபோல் கையெழுத்திட்டு இந்த பொய்யான வழக்கை பிரதிவாதிக்கு எதிராக தாக்கல் செய்துள்ளார். எனவே சமூகம் கோர்ட்டார் அவர்கள் இந்த எதிர்வழக்குரையை ஏற்று வாதி தாக்கல் செய்துள்ள அசல் வழக்கை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமாய் பிரதிவாதி தாழ்மையுடன் பிரார்த்திக்கிறார்.

**4) <u>பிராது மற்றும் எதிர்வழக்குரைகளை பரிசீலனை செய்து கீழ்கண்ட எழு வினாக்கள் வனையபட்டது:</u>**

1) Whether the plaintiff is entitled for the recovery of suit claim from the defendant?

2) If so, whether the plaintiff is entitled for the relief of preliminary decree in respect of the mortgaged suit property for the suit claim?

3) Whether the suit mortgage deed dt: 08.08.2016 is true and valid and executed on proper consideration?

4) To what other relief, the plaintiff is entitled?

**5)** இந்த வழக்கில், வாதி தரப்பில். வாதி திருமதி. எம். சகுந்தலா வா.சா.1 ஆகவும் திருமதி.டி.ஸ்ரீவித்யா என்பவர் வா.சா.2 ஆகவும் விசாரிக்கப்பட்டு வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.5 வரையான ஆவணங்கள்



JAYASHREE THOMAS Digitally signed by JAYASHREE THOMAS Date: 2026.07.27 13:18:39 +0530

குறியீடு செய்யப்பட்டுள்ளன. பிரதிவாதி தரப்பில், பிரதிவாதியின் பவர் ஏஜன்ட் திருமதி. சித்ரா என்பவர் பி.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். பிரதிவாதி தரப்பில் ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

<u>6) எழு வினா எண். 1 முதல் 3 வரை</u>.

வழக்கு கோப்புகளை பரிசீலிக்கும் போது, வாதி இந்த வழக்கினை, வெளிநாட்டில் வசித்து வரும் பிரதிவாதி திரு. எம். கார்த்திகேயன் என்பவர் அவரது பவர் ஏஜன்டும் மனைவியுமான திருமதி. கே. சித்ரா என்பவர் மூலமாக வாதி எம். சகுந்தலா என்பவரிடம் கடந்த 08.08.2016 தேதியில் தாவா சொத்தை அடமானம் வைத்து ரூ.25,00,000/- கடன் பெற்றுக்கொண்டு அதற்காக மேற்படி தேதியில் அக்கடன் தொகையை 24% பின்வட்டி சேர்த்து ஐந்து ஆண்டு காலக்கெடுவிற்குள் திருப்பி செலுத்திவிடுவதாக ஒப்புக்கொண்டு பதிவான அடமான கடன் பத்திரம் எழுதி கொடுத்தும் அதற்கு ஆதரவாக, பிரதிவாதி எம். கார்த்திகேயன் அவரது மனைவியான திருமதி. சித்ரா என்பவருக்கு கடந்த 27.07.2016 தேதியில் எழுதி தந்த பதிவான அதிகார முகவர் ஆவணத்தின் அசல் மற்றும் மேற்படி பிரதிவாதி கார்த்திகேயனுக்கு அவரது தாயார் மற்றும் சகோதர சகோதரிகள் கடந்த 07.12.2015 தேதியில் எழுதி தந்த பாக பாத்திய விடுதலை பத்திரத்தின் அசல் ஆவணத்தையும் கொடுத்துள்ளதாகவும், ஒப்புக்கொண்டபடி அடமான கடனை பிரதிவாதி திருப்பி செலுத்தவில்லை என்பதால், வாதி தன் வழக்கறிஞர் முலம் மேற்படி அடமான கடன் தொகையை செலுத்த கேட்டு கடந்த 13.10.2021 தேதியில் பிரதிவாதிக்கு அறிவிப்பு அனுப்பியதாகவும் அதை பெற்றுக்கொண்டும் பிரதிவாதி கடனை செலுத்த முன்வரவில்லை என்பதால், அடமான கடன் அடிப்படையில் பிரதிவாதி செலுத்த வேண்டிய தாவா தொகை ரூ.49,39,966/-


JAYASHREE THOMAS
Digitally signed by JAYASHREE THOMAS
Date: 2026.07.27 13:18:45 +0530

தற்போதைய வட்டி 18% சேர்த்தும், வழக்கு செலவு தொகை சேர்த்தும் செலுத்த உத்தரவிட கேட்டும், தாவா கடனுக்காக வேண்டி தாவா அடமான சொத்தை பொறுப்பு ஏற்படுத்தி முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பிக்க கேட்டும் வாதியால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பது வழக்குரை சங்கதிகள் மூலமாக தெரிய வருகிறது. மாறாக, பிரதிவாதி தரப்பில் அவரது மனைவி திருமதி. சித்ரா தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில், பிரதிவாதி திரு.எம். கார்த்திகேயனின் பவர் ஏஜன்ட் என்ற முறையில் அவரது மனைவியான திருமதி. கே. சித்ரா இந்த வாதி திருமதி.எம். சகுந்தலாவிடம் கடந்த 08.08.2016 தேதியில் ரூ.25,00,000/- கடன் பெற்றதாகவும் அதற்காக 24% வட்டி சேர்த்து ஐந்து வருட காலக்கெடுவிற்குள் திருப்பி செலுத்த ஒப்புக்கொண்டு அதே தேதியில் ஒரு பதிவான அடமான கடன் பத்திரம் எழுதி கொடுத்ததாகவும் கூறுவது உண்மையல்ல என்றும் பிரதிவாதியின் கணவர் வெளிநாட்டில் நல்ல ஊதியத்துடன் பணி புரிந்து சம்பாதித்து வருவதால், வாதி இந்த பிரதிவாதியின் மனைவி திருமதி. கே. சித்ரா என்பவரை மூளை சலவை செய்து, வாதி நடத்தி வரும் வட்டி தொழிலை விரிவுபடுத்தினால் அதிகம் சம்பாதிக்கலாம் என ஆசை வார்த்தை காட்டி, அதற்கு வேண்டிய பணத்திற்காக, பிரதிவாதி எம். கார்த்திகேயன் பெயரில் உள்ள சொத்தை வாதியின் பெயருக்கு அடமானமாக எழுதி கொடுத்தால் அதன் மூலம் தொழிலுக்கு மூலதனம் பெற்று, மேற்படி வட்டி தொழிலை மேம்படுத்ததால் என கூறி, பிரதிவாதியின் மனைவி திருமதி. கே. சித்ராவை திட்டமிட்டு ஏமாற்றி எந்தவிதமான பண பரிமாற்றமும் இல்லாமல் சொத்தை அடமானமாக எழுதி வாங்கினார் என்றும், எனவே பிரதிவாதி சார்பாக திருமதி. கே. சித்ரா இந்த வாதியிடம் அடமான கடன் எதுவும்

வாங்கவில்லை என்றும் அதனை 24% வட்டி சேர்த்தோ அல்லது 18% வட்டி சேர்த்தோ ஐந்து ஆண்டு காலக்கெடுவில் திருப்பி செலுத்தவோ ஒப்புக்கொள்ளவில்லை என்றும் எனவே தாவா தொகையை பிரதிவாதி செலுத்த வேண்டியதில்லை என்றும் எனவே வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டுமென கட்சி செய்யப்பட்டுள்ளது தெரிய வருகிறது.

7) வழக்குரை கட்சியை ஒத்துரைத்து, வாதி இந்த வழக்கில் வா.சா.1 ஆக சாட்சியம் அளித்து அவர் மூலம் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.5 வரையான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. வா.சா.ஆ.1 என்பது, இவ்வழக்கின் பிரதிவாதி திரு.எம்.கார்த்திகேயனின் மனைவியும் பவர் ஏஜன்டுமான திருமதி. கே. சித்ரா என்பவர் வாதி பெயருக்கு கடந்த 08.08.2016 தேதியில் எழுதி தந்த பதிவான அடமான கடன் பத்திரமாகும். அந்த அடமான கடன் பத்திரத்தின் மூலம், மேற்படி தேதியில் ரூ.25,00,000/- கடன் தொகையை வாதியிடம் மேற்படி திருமதி. கே.. சித்ரா பெற்றுக்கொண்டதாகவும் அதனை ஐந்து ஆண்டு காலக் கெடுவில் 24% பின்வட்டி சேர்த்து திருப்பி செலுத்த ஒப்புக்கொண்டு உரிய சாட்சிகள் முன்னிலையில் கையெழுத்திட்டு பதிவு செய்து கொடுத்துள்ளது தெரிய வருகிறது. மேலும் வா.சா.ஆ.2 என்பது பிரதிவாதி எம். கார்த்திகேயன் அவரது மனைவியான கே. சித்ரா என்பவருக்கு கடந்த 27.07.2016 தேதியில் சிங்கப்பூரில் நோட்டரி வழக்கறிஞர் முன்னிலையில் பொது அதிகார முகவர் ஆவணம் ஒன்றை தாவா அடமான சொத்தை நிர்வாகம் செய்ய உரிமை அளித்து எழுதி கொடுத்து அது குத்தாலம் சார் பதிவாளர் அலுவலகத்தில் கடந்த 01.08.2016 தேதியில் ஆவண எண். 12/2016 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது தெரிய வருகிறது. வா.சா.ஆ.3 என்பது கடந்த



JAYASHREE THOMAS
Digitally signed by JAYASHREE THOMAS
Date: 2026.07.27 13:18:57 +0530

07.12.2015 தேதியில் பிரதிவாதி எம். கார்த்திகேயனுக்கு அவரது தாயார் திருமதி பாப்பா க/பெ. முருகேசன், மற்றும் சகோதரர்கள் திரு.மனோகரன் த/பெ. முருகேசன் , திரு. பாஸ்கரன் த/பெ. முருகேசன் மற்றும் சகோதரிகள் திருமதி. உஷா (எ) உஷாதேவி க/பெ. குமார் , திருமதி. சுமதி க/பெ. சரவணன் ஆகியோர் சேர்ந்து தாவா சொத்தில் அவர்களுக்கு உள்ள பாக பாத்திய உரிமையை, மேற்படி பிரதிவாதி எம். கார்த்திகேயனுக்கு விடுதலை செய்து எழுதி கொடுத்த பதிவான அசல் ஆவணமாகும். வா.சா.ஆ.4 என்பது, வாதி தன் வழக்கறிஞர் மூலம் பிரதிவாதிக்கு தாவா தொகை கேட்டு அனுப்பிய அறிவிப்பின் நகல் ஆகும். அதனை பிரதிவாதியின் மனைவி கே. சித்ரா பெற்றதற்கான அஞ்சல் ஒப்புதல் அட்டை வா.சா.ஆ.5 ஆகும். மேலும், வாதி தரப்பில் இவ்வழக்கில், வா.சா.ஆ.1 அடமான கடன் பத்திரத்தில் சாட்சி கையெழுத்திட்டுள்ள நபர்களில் ஒருவரான திருமதி. டி.ஸ்ரீவித்யா என்பவர் வா.சா.2 ஆக சாட்சியம் அளித்துள்ளார். வா.சா.ஆ.1 அடமான கடன் பத்திரத்தில் சாட்சி கையெழுத்திட்டுள்ள மற்றொரு நபரான எம். மனோகரன் த/பெ. கே. முருகேசன் என்பவர், பிரதிவாதி எம். கார்த்திகேயனின் சகோதரர் என்பது, பிரதிவாதியின் மனைவி கே. சித்ரா இவ்வழக்கில் பி.சா.1 ஆக சாட்சியம் அளித்த போது ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. மேற்படி எம். மனோகரன் உள்ளிட்ட ஐந்து நபர்கள் சேர்ந்து தாவா சொத்தை பொறுத்து வா.சா.ஆ.3 பாக பாத்திய விடுதலை பத்திரத்தை பிரதிவாதி எம். கார்த்திகேயனுக்கு எழுதி கொடுத்துள்ளனர் என்பது மேற்படி ஆவண பரிசீலனை மூலம் தெரிய வருகிறது. தாவா சொத்தை அடமானம் செய்து பெற்ற வா.சா.ஆ.1 அடமான கடனுக்காக வேண்டி, மேற்படி கடன் பெற்ற சமயத்தில் பிரதிவாதியின் சார்பாக அவரது மனைவி திருமதி.கே. சித்ரா, வா.சா.ஆ.2


JAYASHREE THOMAS
Digitally signed by JAYASHREE THOMAS
Date: 2026.07.27 13:19:03 +0530

ஆகிய அவர் பெயரில் அவரது கணவர் தாவா சொத்தை பொறுத்து எழுதி கொடுத்த பொது அதிகார முகவர் ஆவணம் மற்றும் வா.சா.ஆ.3 ஆகிய தாவா சொத்தை பொறுத்த பாக பாத்திய விடுதலை பத்திரம் ஆகியவைகளின் அசலை வாதியிடம் கொடுத்ததாக வாதி தரப்பில் கட்சி செய்யப்பட்டுள்ளது.

**8)** இவ்வழக்கில் பிரதிவாதி தரப்பில், வா.சா.ஆ.1 அடமான கடன் பத்திரத்தில் உள்ள கையெழுத்து மறுக்கப்படவில்லை. மாறாக, வாதி தன்னை மூளை சலவை செய்து, அவரது வட்டி தொழிலை அபிவிருத்தி செய்தால் அதிக பணம் சம்பாதிக்கலாம் என ஆசை வார்த்தை கூறி, அதன் அடிப்படையில், பிரதிவாதி எம்.கார்த்திகேயன் பெயரில் உள்ள சொத்தை வாதி பெயருக்கு அடமானம் எழுதி கொடுத்தால், அதன் மூலம் கிடைக்கும் தொகையை கொண்டு வட்டி தொழிலை அபிவிருத்தி செய்து பணம் சம்பாதிக்கலாம் என கூறியதன் அடிப்படையில், எந்தவிதமான பண பரிவர்த்தனையும் இன்றி மேற்படி வா.சா.ஆ.1 அடமான கடன் பத்திரம் எழுதி தரப்பட்டதாக கட்சி செய்யப்பட்டுள்ளது. வா.சா.ஆ.1 பதிவான அடமான கடன் பத்திரம் மற்றும் அதில் உள்ள கையெழுத்து ஆகியவை பிரதிவாதி தரப்பில் மறுக்கப்படாத நிலையில், பிரதிவாதி கூறும் கட்சியான, மேலே குறிப்பிட்டவாறு வாதி இந்த பிரதிவாதியை ஏமாற்றி வா.சா.ஆ.1 அடமான கடன் பத்திரம் எழுதி பெற்றார் என்பதை நிரூபிக்க வேண்டிய கடமை மற்றும் பொறுப்பு பிரதிவாதியை சார்ந்தது ஆகும். ஆனால், இந்த வழக்கில் எதிர்வழக்குரையில் குறிப்பிடப்பட்ட மேற்படி கட்சி பிரதிவாதி தரப்பில் தகுந்த சாட்சியங்கள் மற்றும் ஆவணங்கள் மூலம் நிரூபிக்கப்படவில்லை. மாறாக, பிரதிவாதியே, தாவா சொத்தை பொறுப்பு

ஏற்படுத்தி வா.சா.ஆ.1 பதிவான அடமான கடன் பத்திரம் எழுதி கொடுத்தது உண்மை தான் என எதிர்வழக்குரையிலும் சாட்சியத்திலும் ஒப்புக்கொண்டுள்ள நிலையிலும், பிரதிவாதி பெயரில் அவரது கணவரால் தாவா சொத்தை பொறுத்து எழுதி தரப்பட்ட வா.சா.ஆ.2 பதிவான பொது அதிகார முகவர் ஆவணம் மற்றும் பிரதிவாதியின் கணவர் பெயரில் தாவா சொத்தை பொறுத்து ஏற்பட்டுள்ள வா.சா.ஆ.3 ஆன பாக பாத்திய விடுதலை பத்திரம் ஆகியவைகளின் அசல் ஆவணங்கள் வாதி தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள நிலையிலும், வா.சா.ஆ.1 அடமான கடன் பத்திரத்தின், உண்மை தன்மை மற்றும் அதன் மூலம் பண பரிமாற்றம் ஏற்பட்டுள்ளது குறித்து வாதி தரப்பு கட்சியை உறுதிபடுத்தி நிரூபிக்கக்கூடியதாகவே அமைந்துள்ளதாக இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே, மேலே விரிவான முறையில் பரிசீலித்த வகையில், வா.சா.ஆ.1 ஆகிய 08.08.2016 அடமான கடன் பத்திரம் உண்மையானது மற்றும் தகுதி வாய்ந்தது என்றும் அதன் அடிப்படையில், தாவா தொகை பிரதிவாதியிடமிருந்து வாதிக்கு கிடைக்கக்கூடியது என்றும் அந்த வகையில், தாவா அடமான சொத்தை தாவா கடனுக்காக வேண்டி பொறுப்பு ஏற்படுத்தி முதல்நிலை தீர்ப்பாணை வாதிக்கு கிடைக்கக்கூடியது என்றும் இந்நீதிமன்றம் தீர்மானித்து, அவ்வாறே இந்த வழக்கின் எழு வினா எண்கள். 1 முதல் 3–க்கு விடை காணப்படுகிறது.

**<u>9) எழு வினா எண். 4</u>**.

இவ்வழக்கின் எழு வினா எண்.1 மற்றும் 2ல் தாவா தொகையை பிரதிவாதியிடமிருந்து இந்த வாதி வட்டி சேர்த்து பெற உரிமை படைத்தவர் எனவும் அந்த கடன் தொகைக்காக வேண்டி தாவா அடமான சொத்தின் பேரில் பொறுப்பு ஏற்படுத்தி முதல்நிலை தீர்ப்பாணை பெற வாதி அருகதை

உடையவர் எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ள நிலையில், மேற்படி தாவா அடமான கடன் தொகை மற்றும் வட்டியை வழக்கு செலவு தொகையுடன் பெற வாதி உரிமை படைத்தவர் என முடிவு செய்து அவ்வாறே எழு வினா எண்.4–க்கு விடை காணப்படுகிறது.

முடிவில், இந்த வழக்கின் பிரதிவாதி இந்த வாதிக்கு தாவா தொகை ரூ.49,39,966/–யையும் அதன் அசல் தொகை ரூ.25,00,000/–க்கு வழக்கு தாக்கல் செய்த தேதி முதல் தொகை முழுவதும் வசூலாகும் நாள் வரை 18% பின்வட்டி சேர்த்தும், வழக்கு செலவு தொகை சேர்த்தும் செலுத்த வேண்டுமென்றும் மேற்படி தொகைக்காக தாவா அடமான சொத்தின் பேரில் பொறுப்பு ஏற்படுத்தியும் முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்படுகிறது. தொகை செலுத்த மூன்று மாத கால அவகாசம் வழங்கப்படுகிறது.

இத்தீர்ப்புரை இன்று என்னால் நேரடியாக சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு இன்று 2026–ஆம் ஆண்டு ஜுலை திங்கள் 10ஆம் நாள் இந்நீதிமன்ற அவையறிய என்னால் பகரப்பட்டது.

JAYASHREE THOMAS
Digitally signed by JAYASHREE THOMAS
Date: 2026.07.27 13:19:21 +0530

கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
(விரைவு நீதிமன்றம்), கும்பகோணம்.

**வாதிகள் தரப்பு சான்றாவணங்கள்**.

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 08.08.2016 | வாதி சகுந்தலாவிற்கு, பிரதிவாதி கார்த்திகேயன் என்பவரின் மனைவியும் பொது அதிகார முகவருமான சித்ரா என்பவர் எழுதி தந்த பதிவான அசல் பெந்தக கடன் பத்திரம். |

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.2 | 27.07.2016 | பிரதிவாதி கார்த்திகேயன் அவரது மனைவி சித்ரா என்பவருக்கு எழுதி தந்த பதிவான பொது அதிகார முகவர் ஆவணம். |
| வா.சா.ஆ.3 | 07.12.2015 | பிரதிவாதி கார்திகேயனுக்கு பாப்பா என்பவர் எழுதி தந்த கிரய பத்திரம் அசல். |
| வா.சா.ஆ.4 | 13.10.2021 | வாதி தன் வழக்கறிஞர் மூலம் பிரதிவாதியின் பவர் ஏஜன்டான சித்ரா என்பவருக்கு அனுப்பிய அறிவிப்பு நகல். |
| வா.சா.ஆ.5 | --- | அஞ்சல் ஒப்புதல் அட்டை. |

**<u>பிரதிவாதி தரப்பு சான்றாவணம்</u>**.

இல்லை.

**<u>வாதி தரப்பு சாட்சி</u>**.

வா.சா.1 திருமதி. சகுந்தலா (வாதி)

வா.சா.2 திருமதி.ஸ்ரீவித்யா.

**<u>பிரதிவாதி தரப்பு சாட்சிகள்</u>**.

பி.சா.1 திருமதி. சித்ரா. (பிரதிவாதி)

JAYASHREE THOMAS

Digitally signed by JAYASHREE THOMAS
Date: 2026.07.27 13:19:26 +0530

கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
(விரைவு நீதிமன்றம்), கும்பகோணம்.